1982 மார்ச் 24

ஆர் எஸ் மங்கலம் மேல்நிலைப் பள்ளியில் தேசிய மாணவர் ஆரம்பிக்கும் திட்டம்

*வினா எண் 632—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர். எஸ். மங்கலம் மேல்நிலைப் பள்ளியில் N.C.C. ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) : ஆர். எஸ். மங்கலம் மேல்நிலைப்பள்ளியிலிருந்து தேசிய மாண வர் படை ஆரம்பிப்பதற்கு விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. ஆனால் போதுமான படை ஒதுக்கீடு இல்லாமையால் இப் போது ஆரம்பிக்க இயலாது. புதுடெல்லியிலுள்ள தேசீய மாணவர் படை இயக்குநர் தலைவர் அலுவலகத்திலிருந்து தமிழக தேசிய மாணவர் படைக்கு கூடுதலான படை ஒதுக்கீடு (additional troop allotment) பெறப்பட்டால், இம்மாதிரி யான மற்ற பள்ளிகளின் கோரிக்கைகளுடன் இப்பள்ளி யின் கோரிக்கையும் பரிசீலிக்கப்படும்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, ஆர். எஸ். மங்களம் பள்ளியிலும் சரி, சுற்றுப்புறத்திலே இருக்கின்ற உயர் நிலைப்பள்ளியிலும் சரி அநதப் பகுதியிலே என்.சி.சி. இல்லாத தன் காரணத்தால் அரசு மீண்டும் பரிசீலனை செய்து அதைக் கொண்டு வர ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநயகம் : தலைவர் அவர் களே, நாம் அதிகமான அளவில் நடத்தவேண்டுமென்றுதான் விரும்புகிறேன். ஆனால் அது மத்திய அரசினுடைய அனுமதி யைப் பெற்றுத்தான் செய்யப்பட வேண்டும். நாம் அதைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதிகமாக தேசிய மாணவர்கள் படையை அவர்கள் அனுமதிப்பார்களானால் நாம் இதுபோன்ற பள்ளிகளுடைய கோரிக்கையை ஆலோசிக்கலாம்.

திரு. கே. தனக்கோடித் தேவர் : தலைவர் அவர்களே, நாம் குடும்ப நலத் திட்டத்தைத் தீவிரப்படுத்தி வருகின்ற நேரத்திலே பிற்காலத்திலே நாட்டிறகுப் பாதுகாப்பு தேவைப் படும் என்பதால் கட்டாயமாக மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற நிலையில்நாம் கட்டாயப்படுத்த முடியாது. அதுமட்டுமல்ல, இப்போது இருக்கின்ற தேசிய மாணவர் படையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவ

1982 மார்ச் 24]

தற்கே மத்திய அரசு அனுமதிக்காமல் இருக்கிறபோது எல்லா மாணவர்களுக்கும் தேசிய மாணவர் படை பயிற்சி அளிக்க வேண்டுமென்று கேட்டால் நிச்சயமாக அவர்கள் தர மாட்டார்கள். அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்கிறபோது அனுமதித்தால் அதிகப்படுத்தலாம்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் மத்தியில் ஒழுங்கீனம் அதிகமாகி கட்டுப்பாடற்ற நிலையில் அவர்கள் இருக்கிறதால், மத்திய அரசிடமிருந்து நிதி குறைவாக வந்திருந்தாலும், மாணவர்களிடத்தில் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் வளர்க்கும் விதத்தில் மாநில அளவிலே ஸ்கவுட் மூவ்மெண்ட்ஸ் போன்ற பயிற்சியை அமுல் படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்நாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளிலே பாடங்களைத்தான் நாம் கட்டாயப் படுத்திக் கொண்டு வருகிறோம். ஒழுங்கீனத்தையும், கட்டுபாடற்ற தன்மையும் குறைப்பதற்கு சில இயக்கங்களை ஆரம்பிக்க வேண்டுமென்று ஆரம்பிக்கிறோம் அதிலே ஒன்று என்.சி.சி. அது டிபென்ஸ் சம்பந்தமான பயிற்சியாக இருப்பதால் இதற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி பெறவேண்டும். துப்பாக்கியெல்லாம் கொடுத்து பயிற்சி தர வேண்டியிருக்கிறது. அதற்கு அடுத்து என்.எஸ்.எஸ். அதிலே மாணவர்கள் சேர்ந்து மக்களுக்கு தொண்டு செய்வதன் மூலமாக கட்டுப்பாடு மட்டும் அல்லாமல் மக்களுடன் சேர்ந்து தங்களை ஐக்கியப்படுத்திக் கொள்கிறார்கள். ஸ்கவுட்டிலே கூட மேல்நிலை பயிற்சியை நாம் தரலாம். இருப்பினும் அவர்களாக இஷ்டப்பட்டு வருகிறபோது நாம் பயிற்சி அளித்தால் தான் அது வெற்றி பெறுமே தவிர நாம் கட்டாயப்படுத்துவது சரியாக இருக்காது. மாணவர்கள் அவர்களாக முன்வர வேண்டும். மாணவர்கள் ஏதாவது ஒரு பயிற்சியில் இருப்பது அவர்களுடைய எதிர்கால வாழ்க்கைக்கு அல்லது வேலைவாய்ப்பு தேடிச் செல்கிறபோது உதவியாக இருக்கும்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.எஸ்.எஸ்.-ல் மாணவர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு மத்திய அரசு அனுமதி தரவில்லை யென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். என்ன காரணத்தாலே அனுமதி தரவில்லை ? இந்த நிலையில் தமிழ்நாடு கேட்டட் கார்ப்ஸ் என்று தமிழ்நாடு அரசு சார்பிலே ஆரம்பிக்க திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கேடட் கார்ப்ஸ் என்று நாம் தனியாக ஒரு படையை ஆரம்பிப்பது அவ்வளவு வரவேற்

கக்கூடிய கருத்தாக படவில்லை. இந்த தேசிய மாணவர் படை மூலம் கிடைக்கக்கூடிய பயிற்சி அதிகப்படியான மாணவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. எல்லா மாணவர்களுக்கும் கொடுத்தால் கூட இந்த அரசு மகிழ்ச்சி அடைகிறது. அதற்கு பயிற்சி தரவேண்டிய பொறுப்பு என்.எஸ்.எஸ். டைரக்ட்டரேட் வசம் இருக்கிறது. அது ஒரு சென்ட்ரல் கவர்ன்மெண்ட் அமைப்பாகும். ஆகவே அவர்கள் அகில இந்திய அளவிலே தான் இந்த ஒதுக்கீட்டை செய்து கொண்டு வருகிறார்கள். நாம் அதிகம் கேட்கிறோம் அவர்கள் கொடுத்தால் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு முயற்சியை மேற்கொள்வோம்.

பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கான நீதிமன்றங்கள்.

வினா எண் 633: திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் விசாரணைசெய்ய குற்றவியல் நீதி மன்றங்கள் ஏற்படுத்தும் உத்தேசம் அரசிடமுள்ளதா ?

(ஆ) மாவட்டங்கள் ரீதியில் அவைகள் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) மற்றும் (ஆ) இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பெண்களுக்காக குற்றவியல் நீதிமன்றங்கள் ஏற்படுத்தும்போது ஜட்ஜ்களாக இருக்கிறவர்கள் பெண்களாக நியமிக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதிகள் பெண்களாகத் தான் இருக்க வேண்டுமென்ற அவசியமும் இல்லை; அதற்கு சாத்தியக்கூறும் இல்லை. பெண்கள் நீதிபதியாக இருக்கிற பகுதிகளிலே அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் குற்றவாளிகளாக கருதப்பட்டு அவர்களை காவல் நிலையங்களிலிருந்து அழைத்துச் செல்லும்போது பெண் காவலர்களை வைத்து அழைத்துச் செல்லப்படுமா ? அதேபோல